**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**முன்னிலை :- திரு. எஸ். விஜயகுமார், எம்.ஏ., எம்.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2022ம் ஆண்டு ஜீன் திங்கள் 09ம் நாள் வியாழக்கிழமை**
**அசல் வழக்குஎண்.489/2021**
**(CNR.No.TNVP02-001244-2021)**

B. கோமதி ... வாதி

/எதிர்/

G. வெங்கடேசன் ... பிரதிவாதி

இவ்வழக்கு 28.10.2021 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 28.10.2021 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு 25.04.2022 தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னர் வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சுந்தரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வாகி அவர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகிவிட்டு பின் பிரதிநிதித்துவம் இல்லாமல் பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்ச படுத்தப்பட்டும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**தீர்ப்புரை**

வழக்கு சொத்தில் வாதிக்கு பாத்தியம் உண்டு என விளம்புகை செய்து அந்த சொத்தில் பிரதிவாதியும் அவரது ஆட்களும் ஏஜெண்டுகளும் துராக்கிரமமாக பிரவேசிக்காமல் இருக்கும்பொருட்டு பிரதிவாதி பேரில் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கும் பொருட்டும், வழக்கின் செலவுத்

தொகை வாதிக்கு பிரதிவாதியால் கிடைக்கும்படிக்கும் பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல்.

2) <u>வழக்குரையின் சுருக்கம்</u>:-

சமூகம் கோர்ட் அதிகார வரம்புக்கு உட்பட்டதும், அடியிற் சொத்து விவரத்தில் கண்ட சொத்துக்கள் விழுப்புரம் வட்டம், சாலையாம்பாளையம் மதுரா ஓட்டேரிப்பாளையம் கிராமத்தில் வசித்துவந்த முத்துசாமிகவுண்டருக்கு முருகேசகவுண்டர், வரதராஜ் கவுண்டர், சுப்பரமணி கவுண்டர் குமாரர்கள் ஆவார்கள் என்றும் இவர்களில் முருகேச கவுண்டர் கடந்த 15.05.1968 தேதியில் மேற்படி கிராமத்தில் வசித்து வந்த பாவாடை சாமி கவுண்டர் வகையராக்களிடம் சரியான பிரதிபிரயோஜனமாக ரூபாய்.4,500/-க்கு ரொக்கமாக கொடுத்து கிரையம் பெற்ற சொத்தாகும் என்றும் அந்த சொத்தை 1970ம் வருடம் பிப்ரவரி மாதம் 17ந் தேதி முருகேசகவுண்டரும், வரதராஜகவுண்டரும் பாகம் பிரித்துகொண்டனர் என்றும் அதில் ஏ அட்டவணையில் உள்ள சொத்துக்கள் முருகேச கவுண்டருக்கும் அட்டவணை பி-ல் உள்ள சொத்துக்கள் வரதராஜகவுண்டருக்கு பாகம் பிரித்துக்கொண்டனர் என்றும் அந்த ஆவணத்தை வளவனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.363/1970 நெம்பராக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி வாதியின் மாமனாரான வரதராஜிகவுண்டர் மேற்படி பாகப்பிரிவினையின் மூலம் கிடைத்த சொத்தை வரதராஜ கவுண்டர் சர்வசுதந்திரமாக ஆண்டு அனுபவித்து வந்து ஆடு, மாடுகள் கட்டியும் கொட்டகை கட்டியும், தோட்டம் அமைத்தும், எவ்வித ஆவணங்களும் ஏற்படுத்தாமலும் கடந்த 06.11.1977ல் உடல்நல குறைவால் இறந்து போனார் என்றும் இறந்துபோன வரதராஜகவுண்டருக்கு இந்து வாரிசு உரிமை சட்டம் 1956 Clause - I-ன் படி மனோண்மணி மனைவி ஆவார் என்றும் வாதியின்

கணவர் பாஸ்கரன் குமாரர் ஆவார் என்றும் வளர்மதி குமாரத்தி ஆவார் என்றும் மனோண்மணி கடந்த 20.09.1986 தேதியில் உடல்நிலை குறைவால் இறந்துவிட்டார் என்றும் வளர்மதி 06.06.2012 தேதியில் திருமணம் ஆகாமல் இறந்து விட்டார் என்றும் இறந்துபோன வளர்மதிக்கு வாதியின் கணவர் பாஸ்கரன் மட்டுமே வாரிசுதாரர் ஆவார் என்றும் அதனை பின்னிட்டு தாவா சொத்துக்கு வாதியின் கணவர் பாஸ்கரன் வாரிசுதாரர் என்ற முறையில் சர்வ சுதந்திரமாக ஆண்டு அனுபவித்து வந்த நிலையில் விழுப்புரம் மண்டல வட்டாட்சியர் கடந்த 2020 ஆம் ஆண்டு நத்தம் அன்று முதல் சர்வ சுதந்திரமாக ஆண்டு அனுபவித்து வந்து அந்த சொத்தை கடந்த 19.07.2021 தேதியில் தன் மனைவியான கோமதி பெயருக்கு தான செட்டில் மூலம் எழுதி அதனை வளவனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 2362/2021 என்ற எண்ணில் பதிவு செய்து அன்றய தேதியிலேயே தாவா சொத்தை வாதியிடம் ஒப்படைத்துவிட்டார் என்றும் அதனை பின்னிட்டு தாவா சொத்தை வாதியும் வாதியின் மாமனார் வரதராஜீகவுண்டரும் கடந்த 40 வருடமாக அனுபவித்து வந்த வகையில் வாதிக்கு Prescriptive title சித்தித்து உள்ளது என்றும் இந்நிலையில் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தின் மேற்கில் மனை உள்ளது என்றும் வாதியிடம் வழக்கு சொத்தை குறைந்த விலைக்கு கேட்டார் என்றும் வாதி வழக்கு சொத்தை கிரையம் கொடுக்க முன் வராததால் அவர் மீது முன் விரோதம் கொண்டு கடந்த 26.10.2021 தேதியில் பிரதிவாதியும் அவரது ஆட்களும், ஏஜெண்டுகளும் துராக்கிரமாக பிரவேசித்து சுவாதினம் செய்துகொள்ள மிகவும் தீவிரமான முயற்சி செய்ததால் வாதி பிரதிவாதியின் தகாத செயல்களை தனது ஆட்களை கொண்டு தடை செய்துவிட்டார் என்றும் அதனால் வழக்கு சொத்தை நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி சமூகம் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் வாதிக்கு ஏற்பட்டுள்ளது என்றும் மேற்படி நெம்பர் வழக்கு விசாரணை

முடியும் வரையில் வழக்கு சொத்தில் பிரதிவாதியும் அவரது ஆட்களும், ஏஜெண்டுகளும் துராக்கிரமமாக பிரவேசிக்காமல் இருக்கும் பொருட்டு பிரதிவாதி பெயரில் ஒரு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்க வாதி இத்துடன் சி.பி.சி. ஆர்டர் 39 ரூல் 1 மற்றும் 2ன் படி தனி மனுவும் இத்துடன் தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி நெம்பரில் பிரதிவாதி தாக்கல் செய்யும் எதிர்வழக்குரை தன்மைக்கேற்ப வழக்குரையை திருத்திகொள்ளும் உரிமையை வாதி இதன் மூலம் Reserve செய்து கொள்கிறார் என்றும் கூறி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதிக்கு அழைப்பானை சார்வாகி பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் ஆஜராகிவிட்டு பின் பிரதிநிதித்துவம் இல்லாமல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் பிரதிவாதியை 22.04.2022 அன்று அழைத்தும் ஆஜராகாததால் அவர் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டார்.

4. வாதி தரப்பில் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்துள்ளார். வா.சா.1 மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடப்பட்டுள்ளது. பின் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

## 5. <u>தீர்வுக்கான பிரச்சனை</u>

1) இவ்வழக்கில் வாதி கோரிய படி வழக்கு சொத்தில் வாதிக்கு பாத்தியம் உண்டா ?

2) வழக்கு சொத்து தாவா தாக்கல் தேதியில் வாதியின் சுவாதினத்திலும் அனுபவத்திலும் இருந்து வந்ததா ?

3) வாதி கோரியபடி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி வழக்கு தீர்ப்பாணை செய்யத்தக்கதா ? என்பதே இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சனையாகும்.

6. <u>1 முதல் 3 பிரச்சனைகளுக்கான தீர்வு :-</u>

வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், வழக்கு சொத்து வாதியின் கணவர் வாரிசு முறையில் ஆண்டு அனுபவித்து வந்து அவர் வாதிக்கு தான செட்டில்மென்ட் மூலம் ஒப்படைத்துவிட்டார் என்றும் வாதிக்கு அதில் 40 வருடமாக அனுபவித்து வந்ததன் மூலம் உரிமை சித்தித்துள்ளது என்றும் வாதி தனது வழக்கை வா.சா.1 சாட்சியம் மூலம் மெய்பித்துள்ளார் என்றும் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் ஒருதலைப்பட்சம் ஆகிவிட்டார் என்றும் கூறி தாவா படி தீர்ப்பாக உத்தரவிடுமாறு வேண்டி வாதிட்டார்.

7. வாதி தரப்பு வாதமும் வழக்கு ஆவணங்களும் கவனத்துடன் பரிசீலித்து கருத்தில் கொள்ளப்பட்டது.

8. வா.சா.1/வாதி தாவா பிராது சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார்.

9. வா.சா.ஆ.1 கிரய பத்திரம் மூலம் முருகேச கவுண்டர், பாவாடை சாமி கவுண்டர் வகையறாக்களிடம் இருந்து வழக்கு சொத்தை 15.05.1968ம் தேதியில் கிரையம் பெற்றிருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

10. வா.சா.ஆ.2 பாகப்பத்திரம் மூலம் முருகேச கவுண்டர் மற்றும் வரதராஜ் கவுண்டர் இவர்களுக்குள் வழக்கு சொத்தை பொருத்து பாகப்பிரிவினை 17.02.1970ல் செய்து கொண்டிருப்பதும் அதில் பி அட்டவனை சொத்துக்கள் வாதியின் மாமனார் வரதராஜ் கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டிருப்பதும் முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

11. வா.சா.ஆ.3 வாரிசு சான்று மூலம் வரதராஜ கவுண்டருக்கு வாதியின் கணவர் பாஸ்கரன் மற்றும் வளர்மதி என்ற குழந்தைகள் வாரிசுகளாக இருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

12. வா.சா.ஆ.4 சிட்டா மூலம் தாவா சொத்துக்குரிய புல எண் 891/3ல் கண்ட சொத்தானது வாதியின் கணவர் பாஸ்கரன் பேரில் பட்டா எண் 33ன் ஆக பட்டாவாகி இருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

13. வா.சா.ஆ.5 அடங்கல் மூலம் தாவா சொத்தானது வாதியின் கணவர் பாஸ்கரன் பேரில் பட்டாவாகி அனுபவத்தில் இருந்திருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

14. வா.சா.ஆ.6 தீர்ப்பாணை மூலம் மேற்படி வளர்மதிக்கு வாதியின் கணவர் பாஸ்கரன் மட்டுமே வாரிசு என விளம்புகை செய்யப்பட்டிருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

15. வா.சா.ஆ.7 தீர்ப்புரை மூலம் மேற்படி வளர்மதிக்கு வாதியின் கணவர் பாஸ்கரன் மட்டுமே வாரிசு என விளம்புகை செய்யப்பட்டிருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

16. வா.சா.ஆ.8 தான செட்டில்மென்ட் மூலம் தாவா சொத்தை வாதியின் கணவர் பாஸ்கரன் வாதிக்கு தானம் செய்து சொத்தை ஒப்படைத்து இருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

17. வா.சா.ஆ.9 இறப்பு சான்று மூலம் மேற்படி வரதராஜ கவுண்டர் 06.11.1977ல் இறந்திருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

18. வா.சா.ஆ.10 இறப்பு சான்று மூலம் மேற்படி வரதராஜ கவுண்டர் மனைவி மனோன்மணி 20.09.1986ல் இறந்திருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

19. வா.சா.ஆ.11 இறப்பு சான்று மூலம் மேற்படி வளர்மதி 06.06.2012ல் இறந்திருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

.

20. பிரதிவாதி தரப்பில் தாவா பிராதை மறுத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி வா.சா.1 சாட்சியத்தையும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 சான்றாவணங்களையும் குறுக்கு விசாரணை செய்து மறுக்கவில்லை. வாதி வா.சா.1 சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 சான்றாவணங்கள் வழக்கு சொத்தில் தனக்கு பாத்தியம் இருப்பதையும் அதில் தனக்கு அனுபவமும் சுவாதீனமும் தாவா தாக்கல் தேதியில் இருப்பதையும் மெய்ப்பித்துள்ளார். வழக்கு சொத்தில் வாதிக்கு பாத்தியம் உண்டு என்றும் வழக்கு சொத்து தாவா தாக்கல் தேதியில் வாதியின் சுவாதினத்திலும் அனுபவத்திலும் இருந்து வந்தது என்றும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

21. மேலே கண்ட காரணங்களினால் வாதி தரப்பு வாதம் ஏற்கப்பட்டு இவ்வழக்கில் வாதி கோரிய படி வழக்கு சொத்தில் வாதியின் பாத்தியத்தை விளம்புகை செய்தும் அந்த சொத்தில் பிரதிவாதியும் அவரது ஆட்களும் ஏஜென்டுகளும் துராக்கிரமமாக பிரவேசிக்காமல் இருக்கும் பொருட்டு அவர்கள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை வாதிக்கு வழங்கியும் தாவா செலவுத் தொகையுடன் தீர்ப்பு செய்யத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அதனால் வாதி கோரியபடி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி வழக்கு தீர்ப்பாணை செய்யத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக, இவ்வழக்கில் வாதி கோரிய படி வழக்கு சொத்தில் வாதிக்கு பாத்தியம் உண்டு என விளம்புகை செய்தும் அந்த சொத்தில் பிரதிவாதியும் அவருடைய ஆட்களும் ஏஜென்டுகளும் துராக்கிரமமாக பிரவேசிக்காமல் இருக்கும் பொருட்டு அவர்கள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கியும் தாவா பிரதிவாதிக்கு எதிராக வாதிக்கு செலவுத் தொகையுடன் தீர்ப்பு செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்த நீதிமன்றத்தில் 09.06.2022 ஆகிய இன்று பகரப்பட்டது.

/ஒப்பம்/எஸ்.விஜயகுமார்,
முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**இணைப்பு**

**வாதி தரப்பு சாட்சிகள்**

வா.சா.1. திரு.கோமதி (வாதி)

**வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 15.05.1968 | முருகேச கவுண்டர், பாவாடை சாமி கவுண்டர் வகையறாக்களிடம் கிரயம் பெற்ற கிரய பத்திரம் (அசல்) (ஆவண எண்.493/1968 வளவனூர் சார்பதிவாளர் அலுவலகம்) |
| வா.சா.ஆ.2 | 17.02.1970 | முருகேச கவுண்டர் மற்றும் வரதராஜ் கவுண்டர் இவர்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் (ஆவண எண்.361/1970 வளவனூர் சார்பதிவாளர் அலுவலகம்) |
| வா.சா.ஆ.3 | 08.11.2013 | விழுப்புரம் வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட வரதராசு கவுண்டருக்கான வாரிசு சான்று (அசல்) |
| வா.சா.ஆ.4 | - | விழுப்புரம் மண்டல வட்டாட்சியர் அவர்களால் நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தூய சிட்டா (அசல்) |
| வா.சா.ஆ.5 | - | விழுப்புரம் மண்டல வட்டாட்சியர் அவர்களால் நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தூய அடங்கல் அசல் |
| வா.சா.ஆ.6 | 26.11.2019 | விழுப்புரம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.23/2019 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பாணை (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.7 | 26.11.2019 | விழுப்புரம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.23/2019 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புரை (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.8 | 19.07.2021 | வாதி பெயருக்கு அவருடைய கணவர் பாஸ்கரன் அவர்களால் எழுதிவைத்த தான செட்டில்மென்ட் பத்திரம் (அசல்) (ஆவண எண்.2362/2021 வளவனூர் சார்பதிவாளர் அலுவலகம்) |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.9 | 11.11.2013 | வரதராசு கவுண்டர் இறப்பு சான்று (அசல்) |
| வா.சா.ஆ.10 | 11.11.2013 | மனோன்மணி இறப்பு சான்று (அசல்) |
| வா.சா.ஆ.11 | 03.10.2013 | வளர்மதி இறப்பு சான்று (அசல்) |

**பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

(இல்லை)

/ஒப்பம்/எஸ்.விஜயகுமார்,
முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.